# ஆதி மார்க்க னீதி மொழி

**March 2026**

***இதழ் 56 – மார்ச் மாதம் 2026 வெளியீடு***

***© AMNA Trust, Chennai***



### மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!
மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்னோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

### பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

### மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்நு மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்நு ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்நு தேவப்பிறப்பிலே பிறந்நு ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!



Copyright © AMNA Trust, Chennai 

# குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் ஆசீர்பாதத்துடன் ஆதி மார்க்க னீதி மொழியின் மின்னணு சஞ்சிகை அருமையான இந்த 2026ஆம் ஆண்டு தனது 56ஆவது இதழ் விரித்து உங்கள் கைகளில் மெய்மணத்துடன் மலர்ந்து மணம் கமழ்கிறது.

காலத்திற்கு அதிபதியான காலனை நேசமாகக் கொண்டதால் தான் ஆறறிவு பெற்றும் ஐயறிவு நுகர்ச்சியில் வாழும் மனிதனுக்கு பயமும் பேடித் தனமும் வருகிறது. மனிதனின் எல்லா சுகங்களையும் துக்கமாக மாற்றி வைக்கக்கூடிய ஒரே நிகழ்வு மரணம் ஒன்றே. ஏதேதோ எண்ணமுடன் எப்படி எப்படியோ வாழ்ந்த மனிதனின் அத்தனை நிலைகளையும் பொடிப் பொடியாகச் செய்வது காரிடியாகிய எமனின் கை தொடும் மரண நேரமே.

காலனுடைய கணவாய் என்னும் கடூர கோர எல்லையில் எம வாதை எனும் இருள் அமளியில் மனுவை சிக்காமல் விலக்கிக் காக்கும் ஒரு பரிசுத்த மெய் ஆலயமானது ஒவ்வொரு மனுத் தேகத்திலும் தலையான தலை என்ற ஒன்றாக விளங்குகிறது. அதை அறிவதற்கான அறிவைப் புகட்டி செயலாக்கி வைக்கும் பாரப் பெரிய பரோபகாரச் செயலை அடி நாதமாக உள்ளடக்கி செயலாக்கி வருவதே ஆதி மார்க்க னீதி அவை.

பிரதிவாரமும் செவ்வாய் வியாழன் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் காணொளி காட்சியாகவும் நேர் முகமாகவும் ஆதி மார்க்க னீதி அவையின் நிகழ்வுகள் பிரம்மதேசம் கார்த்திகை குடில் போன்ற பல்வேறு இடங்களில் பற்பல நிலைகளில் நடப்பதன் நோக்கம் மக்களின் அறியாமை விலக்கி அறிவு நிலையில் ஏற்றி வைக்கும் அரிதிலும் அரிதான செயலுக்காகவே.

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களே, இம் மெய்ஞான ஒருருளைத் தேவரதத்தில் மக்களை ஏற்றி சொர்க்கபதிக்கு ஆளாக்கும் திருச்செயலின் அதிபதி. அவர்களின் திருநாமத்தை ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்யும் செயல் ஒன்றே இந்த ஆதி மார்க்க னீதி அவையின் நோக்கம்.

பாரப் பெரிய பரோபகார இம் மெய்ச்செயல் மேலும் மேலும் சீர் சிறப்புடன் வரும் காலமெல்லாம் நடந்து மக்கள் யாவரும் உய்ய வேண்டியே சரவண



Copyright © AMNA Trust, Chennai

நந்தவன வளாகத்தில் உள்ள ஆதி மார்க்க னீதி அவையின் மெய் ஆலயம் பொல்லாப் பிணி நீக்கும் பெருந்தவப் பள்ளியாக பீடு நடை போடுகிறது. அத்துடன் பிண நாற்ற தீட்டுக்குரிய நரனை தேவனாக மாற்றும் அரும்பெரும் செயலுக்கென 64 அடி உயர கொடிக் கம்பத்தில் பட்டொளி வீசி மக்களைக் கூவி அழைக்கும் கொடியுடன் சீர் சிறப்புடன் திகழ்வதே இந்த தெய்வீக ஆலயம்.

வருங்கால சந்ததிகளும் இந்த திருச் செயலைப் பெற வேண்டும் என்ற உன்னத நோக்குடன் செயலாற்றி வருவதே எனது ஆதி மார்க்க நீதி அவை. இதன் ரகசியங்கள் யாவற்றையும் உள்ளடக்கி வரும் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்சிகை புத்தெழில் பிறங்க இன்றும் என்றும் உங்கள் முன் மலர்ந்து மெய்மணம் கமழ்வது சத்தியம்.

இதனைப் பார்த்து படிக்கும் மக்கள் யாவரும் நற்கதி பெற்று நல்வாழ்வு வாழ்வதற்கான செயல் நடைபெறும் எல்லையைத் தேடி அடைய வேண்டும் என சர்வ வல்லமை பொருந்திய பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடியை போற்றி வணங்கி வேண்டுகிறேன்.

நமஸ்காரம்.

*சாலை ரவி*

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை



Copyright © AMNA Trust, Chennai

*பிறருக்குத் தீமைசெய்ய, அல்லது தனக்கே தீமை தேடிக்கொள்ள முயற்சி தேவையில்லை. ஆனால், பிறருக்கு னன்மை செய்ய, அல்லது தனக்கு னன்மை தேடிக்கொள்ள அசையாத வைராக்கிய சித்தம், னிலைத்த திடம், எதற்கும் விட்டுக்கொடுக்காத தைரியம் வேண்டும். பிறர் குற்றம் பார்த்துக்கொண்டே போனால், உன் அங்ஙக் குலங்ஙளே உன்னைப் பகைக்கும். இது எமது கையேட்டு அனுபவம்.*

*மனிதனின் சூக்கும தேகமாகிய தன் சொந்ந தேகத்தில் - சிவனடி பாதத்தில், இவனை ரக்ஷிக்கிற 16 அக்கினிகளும், பக்ஷிக்கிற 9 அக்கினிகளும் இருக்கின்றன. அப்படியிருக்க, தியானம் என்று சொல்லி இவனது ஈனமனத்தை அங்ஙுக் கொண்டுபோய் வைப்பானாகில் பக்ஷிக்கிற தீயில்தான் வைப்பான். உனது ஆசானாகிய ஜீவபதியரசரின் உத்திரவு இல்லாமல் அங்ஙுப் போனால், னிச்சயம் அத்தீயில்பட்டுச் சுருண்டு தான்போகணும்.*

***~ சாலை ஆண்டவர்கள்***



Copyright © AMNA Trust, Chennai

# ஆதி மார்க்க னீதி அவையின் 2026 பிப்ரவரி மாதம் அவை நிகழ்வுகள் – 2026 மார்ச் மாதம் வெளியீடு

## 01-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் பொற்பாதம் போற்றி, **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.
*ஜீவ சகோதரர் விஜயகுமார்:* இக பர வாழ்வின் முழுமையை கற்றுத் தேர்ந்தவர்களே மெய்ஞ்ஞானப் பாரவான்கள். பிறவிப் பிணியில் சிக்கித் தவிக்கும் மக்களை மீட்டு, சாகாக் கல்வி பழகச் செய்து பிறவாமை எனும் பேரின்பப் பெருவாழ்வில் குடியேற்றி வைக்கிறார்கள்.

**எமன் படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல்:10 (தொடர்ச்சி)**
குருனாதரின் ஓசை கொண்ட நடனமானது நம் செவிகளில் நுழைந்து உயிர்க் களிப்பை உண்டாக்குகிறது. அழிவுக்கான பாதையில் செயல்பட்டுக் கொண்டிருந்த மனதை செம்மைப்படுத்தி அழியா வர வாழ்வில் குடியேற்றுகிறது.

*ஜீவ சகோதரி ஹேமலதா:* ஆசானின் ஆவிடை எனும் தேவ யோனியில் மறுபிறப்பு பெற்ற மனிதன் பிராணனை தன் வசப்படுத்தியதன் அடையாளமாக முப்புரினூலும், பிரணவ சொரூபமான ஆறுமுகனை தரிசித்ததின் அடையாளமாக அறுபுரினூலும் தரித்து தேவப் பதத்திற்கு உரியவனாகிறான்.

*ஜீவ சகோதரி உமாராணி:* ஆசானின் விண்ணான ஆகாயத்தில் இருந்து வரும் னாதமெனும் அமுத உணவு உட்கொண்டு நம் ஜீவன் வனப்பேறி யௌவனமடைகிறது.

*ஜீவ சகோதரி விஜயலஷ்மி:* நவக்கிரகக் கோளரிவாளரின் அனுக்கிரகத்தால் இல்லறம், கிரகஸ்தன், சன்யாசம், பிரம்மச்சரியம், வானப்பிரஸ்தன், துறவறம், அறம், சமத்துவம் எனும் பெருநிலை வைப்புகள் செயலாக்கப் பெறுகிறது.

*ஜீவ சகோதரி லாவண்யா:* ஓர் எதார்த்த தேவ குருவின் திருவடியில் சரணாகதி அடைந்தவர்கள் இறைவனிடம் பெற்று வந்த அமானிதக் கடனை அடைத்து ஜென்ம சாபல்யம் பெறுகிறார்கள்.

*ஜீவ சகோதரர் அஜய் கிருஷ்ணன்:* ஆசானின் அருளமுதத்தை உண்டு பெருகிய குருகுல மக்கள் அனைவரும் ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவு பெற்று புண்ணியராக வாழ்கிறார்கள்.

*ஜீவ சகோதரி பூர்ணிமா:* தோடுடைய செவியனாகிய சிவகுரு வரதரின் திருவாய்மொழி கேட்டு அறிவுத் தெளிவடைந்த மக்களின் மாயக்காடாகிய வினைகள் தீர்க்கப்பெற்று மரணமிலாப் பெருவாழ்வு அளக்கப் பெறுகிறது.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவடைந்தது.



Copyright © AMNA Trust, Chennai 

## 05-02-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **அறமுதலா யதுவுதவு மதிபதி ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**

மெய்ஞானம் எனும் பேரறிவின் மூலமே சர்வேஸ்வரனாகிய இறைவனை தரிசிக்க முடியும். ஏழு திரை கடந்த எட்டாம் நிலையில் அருட்பெருஞ்ஜோதியாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் அவ் இறைபொருளை ஆசான் அருளால் அறிந்தடையும் செயலே அடக்கம். உயிருள்ள போதே ஜீவனை கண்டு தரிசித்து ஜென்ம சாபல்யம் பெறவே இம்மானிட ரூபம் தாங்கி வந்துள்ளோம் என்ற தேவ ரகசியத்தையே சர்வ வேதங்களும் அருளுகிறது.

**எமன் படர் அடிபடு திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் : 10**

பிரளயம் என்பது புற உலக அழிவை குறிப்பதல்ல. மன உலகின் ஆட்டம் லயப்பட்டு அறிவின் ஆட்சியில் பிரண்டு நிற்பதற்கான மெய்ச்செயலை குறிப்பதாகும். படைப்பு கர்த்தாவாகிய நான்முகனின் உற்பனத்தை நிறுத்தி எண்ணம் பல கோடியாய் விரிந்து எமவாய்க்குள் சிக்காமல் காக்கும் அதி உன்னதத்தை உணர்த்துவதே நின்றதொரு பிரளயமாகும்.

*ஜீவ சகோதரர் தாமோதரன்:*

தேவ சித்தத்தின் படி மனுவானவன் பரிசுத்தமாக வாழ்வதற்கான வழி வகைகளை அருளுவதே சத்திய வேதமாகும். இறைவனின் ரகசியப் பெட்டகமாகிய மனுவின் தேக ஆலயத்துள் விழியில் ஜோதியாக, செவியில் ஓசையாக, நாவில் நாதமாக, மூக்கில் வாசமாக, மெய்யில் உணர்வாக இலங்கிக் கொண்டிருப்பதை அறிவதே ஆறாவது அறிவாகும்.

*ஜீவ சகோதரர் கௌதம் :*

மெய்கண்டார் எனும் திருநாமத்திற்குரிய குருநாதரின் திருவடியில் பணிந்து, மெய் எனும் பொருப்பு இன்னதென அறிவதே ஞானம். மனமானது கீழ் நோக்கமாகிய நபுசில் சிக்காமல் பாதுகாத்து மேல் நோக்கமெனும் சிபத்தின் வழியில் செலுத்துவதே சாகா வர வாழ்வாகும்.

**குருபிரான் அருளமுதம் :**

ஒருருளை தேவ ரதத்தை கொண்டு ஆட்சி புரிந்து அகரப் பொருளுக்குள் அடங்கியிருக்கும் அகிலத்தை அறிவிக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை. மூலமந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரத்தை செயலாக கொண்டு கோலோச்சி கொண்டிருக்கும் இப்பேரியக்கத்தில் தலையிட்ட மக்கள் யாவரும் செழிப்போடு வாழ்வாங்கு வாழ்வார்கள் என்று ஆசிர்பதித்து, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 07-02-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **சீர்மேவு மெய்ஞ்ஞான தெய்வச் சிரோன்மணியை...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
சாலைத் தமிழ் எனும் ஏற்றமிகு கல்வியைக் கற்பதுவே சீர்மேவு மெய்ஞ்ஞானம். ஞான பண்டிதரின் தயவால் நம் சிரத்தில் பதியப் பெற்றிருக்கும் தெய்வச் சிரோன்மணியை தரிசித்து, ஆன்மா லயமாகும் இடமாகிய ஆலயத்தை அடைவதே வீடடைதலாகும்.

*ஜீவ சகோதரர் கோபினாத்:*
**கைபேசியை கவனமாக உபயோகிக்கும் முறை :** AI (Artificial intelligence) என்பது மனிதன் செய்யக்கூடிய நுணுக்கமான வேலைகளையும் திறம்படச் செய்யும் நுண்ணறிவு செயலியாகும். மனிதனின் உதவியின்றி கணினியால் செய்து முடிக்கப்படும் வேலைகள், புகைப்படத்தில் கையாளும் புதுமையான யுக்திகள், எதிர்கால அரசுப் பணிகள், மற்றும் உரையாடலை உருவாக்கும் செயற்கை நுண்ணறிவு (chat GPT), மொழி பெயர்ப்பு மற்றும் மருத்துவத் துறை இவற்றில் AI யின் பங்கு அதிகமாக உள்ளது.

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :*
**வேதாகமப் பகிர்தல் - ரோமன் அதிகாரம் 7 : 25** பருமரக்கலனாக வரும் இறுதித் தீர்ப்பரின் தயவால் சாகாக்கலை பழகித் தேர்ந்த பின் நம் மாயத்திரைகள் விலகி அறிவுச்சுடர் பிரகாசிக்கிறது. மூச்சு துண்டாடப்பட்டு நஷ்டமடைவது பாவம் என்பதை செயலளவில் நிரூபித்து புண்ணியத்தின் வழி இட்டுச் செல்பவரே இறைகுரு. அழி தேகத்திலிருந்து நம்மை அழியாப் புகழுடம்பில் குடியேற்றி வைத்து காய மன வாக்கினால் அடைந்த கன்மத்தை கடப்பதற்கான உபாயங்களை உரைக்கிறார்கள். அருகுனுனி வாசலுக்குள் னுழைந்து பழகிய பெரியோர்களின் இரக்கத்தால், நம் வயது வாழ்னாளானது புலன் வழி அழியாது மீட்கப் பெற்று பிறவானெறி எனும் மேலாம்பர வாழ்வு வரமானது அருளப்பெறுகிறது.

*ஜீவ சகோதரர் தாமோதரன்:*
**அனுதின பரலோக மன்னா - சங்கீதம் : 75** அவதார புருஷராக வரும் குரு பிரானின் தயவால் தன்னையறியும் தவநிலையில் பழகி வர, அடக்கம் எனும் அழியா சொர்க்கப் பதி வாழ்வு பெறலாம். உடல், உயிர், ஆன்மாவின் இரகசியத்தை குருவின் அருளமுத வர்ஷிப்பினால் அறிந்து பூரணத்துவம் பெறுவதே மானிடப் பிறப்பின் தலையாய கடமையாகும்.

*ஜீவ சகோதரர் தியாகராஜன்:*
அறிவுக்கும் அறியாமைக்கும் உள்ள வித்தியாசத்தை குரு பெருமான் மூலம் அறிவதே தன்னையறிதல். அவரவர் நாமத்திற்குரிய பொருளே வெளிச்சப் பொருளாக நின்று நம்மை வழிநடத்துகிறது என்ற மெய்ச் செயலை உணர்த்தும் உன்னத இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே னிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 08-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
## தொகுப்பு: ஸ்ரீ. ஜெய் குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆசின்மறை பேசித்தொலை யாததும்…** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
துக்க நிவர்த்தி சுகப் பிராப்தியை நாடியே சகல உயிர்களும் வாழ்கிறது. ஐயறிவு ஜீவராசிகள் அனுபவிக்கும் சிற்றின்பத்திற்கு எல்லை வரையறை உண்டு. ஆனால் நவரசங்கள் பொதியப் பெற்ற மனிதனுக்குள் எல்லையற்ற பரமானந்தம் அனுபவிக்கும் ஆறாவது அறிவானது இறைவனால் படைக்கப் பெற்றுள்ளது.

*ஜீவ சகோதரர் வடிவேலன்:*
மனிதன் ஐம்புலன்களால் அனுபவிக்கும் சுகங்கள் யாவும் சிற்றின்பமே. ஐந்து அவத்தைகளில் ஜாக்ரம் , சொப்பனம் , சுழுத்தி எனும் மூன்று நிலைகளை நித்தம் அனுபவிக்கிறோம். துரியம், துரியாதீதம் என்ற பெரு நிலைகளை ஆசான் அருளால் அறிந்து தூங்காமல் தூங்கி சுகம் பெறுவதே பேரின்பமாகும்.

*ஜீவ சகோதரி மணிமொழி :*
இறை நீதித் தீர்ப்பாகிய சொர்க்கம் நரகம் என்பது மனிதனின் நினைவென்னும் ஆகாயத்தில் உள்ளது. மனமானது அவித்யா பாதமாகி கீழ் நோக்கத்தில் பாய்வது நரகமாகவும், வித்யா பாதமாகி மேல் நோக்கத்தில் செல்வது சொர்க்கமாகவும் உள்ளது.

*ஜீவ சகோதரி கவிதா (திருத்தணி ) :*
குருபிரான் அருளால் மெய் இருதயத்தை தரிசித்த தருணமே ஆத்ம தேடலுக்கான தாகம் தீர்கிறது. **உடம்பினைப் பெற்ற பயனாவதெல்லாம் உடம்பினில் உத்தமனைக் காண்** என ஔவை பிராட்டியார் அருளியதற் கிணங்க, உடலுள்ள போதே உத்தமப் பொருளை உணர்ந்து உயர் ஞானம் அடைய வேண்டும்.

*ஜீவ சகோதரர் மனோகர் :*
தாயாகி தந்தையுமாய் தாங்கி நிற்கும் தெய்வமே குரு பிரான். அழி அவா இச்சையில் அலைபாயும் மனதை செம்மைப்படுத்தி அன்பெனும் பிடிக்குள் அகப்பட வைக்கிறார்கள். கற்றதின் பயன் நற்றாளை அறிவது என்ற பேருண்மையை உணர்த்தி பேரின்ப முத்தி வீட்டில் குடியேற்றுகிறார்கள்.

*ஜீவ சகோதரர் கேசவன் :*
அஷ்டாங்க யோகத்தின் பலனாக நம் எண்ணங்கள் பல கோடியாய் விரியாமல் ஓரறிவாய் நிற்கிறது. குருபிரான் அருளும் யோக நிலைகள் யாவும் அண்டத்திற்கு ஒத்தது பிண்டம் என்ற பிரபஞ்ச தத்துவத்தை உணர்த்தும் மந்திர திறவுகோலாக திகழ்கிறது.

*ஜீவ சகோதரர் தட்சிணாமூர்த்தி :*
மனிதனுக்கு தனிச் சீதனமாக தரப்பெற்றுள்ள ஆறாவது அறிவின் செயலை அறிவதே தன்னையறிதல். அறிவாகார சொரூபராகிய ஆசானின் திருவாக்கிற்கிணங்கி ஒழுக்கநெறி முறைகளுடன் வாழ்ந்தால் மெய்வாழ்வின் உள்ளார்ந்த உண்மையை உணரலாம்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai

## 12-02-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **நம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான் நமசிவ இருப்பறியான்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம் :**
சாலை ஆண்டவர்கள் யுக புருஷராக அவதரித்து இல்லறத்தில் வாழ்ந்த தம் மக்களை சாவருமுன் சாகப்பழகும் சன்மார்க்க செயலால் மெய்வழியில் குடியேற்றி மாபெரும் யுகப்புரட்சி புரிந்தார்கள். எமனின் கூர் மழுங்கடிக்கும் வல்லபமுடைய வாளாயுதத்தை திருக்கரத்தில் ஏந்தி வரும் குருபிரானின் கைவசமான மக்கள் கைலாச வாசனின் திருச்சன்னதி அடைவது சத்தியமே.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் திருவாக்கியம் எண் : 10 (தொடர்ச்சி)**

*ஜீவ சகோதரர் விஜயகுமார் :* அறிவு வடிவாகிய ஆசானின் அமுத வர்ஷிப்பின் தீஞ்சுவையை உணர்ந்தவர்களே நன் மக்கள். ஆசானின் நன்னாதமே நரனை முறை சங்காரம் செய்து மனுவாக மாற்றி மறைபடாத் தேவராக்குகிறது. ஆசானின் அன்பெனும் பிடிக்குள் அகப்பட்டு கங்குல் பகலற்ற இடமான நித்திய தேகத்தில் குடியேறி வாழ்வதே பேரின்பமாகும்.

**இராஜசன்னியாசி னிலை :**
*ஜீவ சகோதரர் சங்கர் :* வித்தில்லா வித்தாகிய நாதம் மூலம் மனுத்தலையை செழிப்படைய செய்பவரே சிவராஜர். காம முடி பீடமாகிய கபாலத்துவாரத்தை குருமுகமாய் அறியும் செயலே சன்னியாசம். அறுசுவை கொண்டொளித்த இடமாகிய அகாரத்தை கண்டு பத்தாவது வாசலுக்குள் குடியேறி கதிர்காமமாகிய ஜீவ பிரகாசத்தை தரிசித்தவரே இராஜ சன்னியாசி.

**குருபிரான் அருளமுதம் :**
திருவெனும் அட்சரத்துள் திரட்டி வைத்திருக்கும் மறைபொருளை அறிந்து அடைவதே மெய்ஞ்ஞானம். இராஜ அங்கத்தில் அமர்ந்து ஐம்புலக் கதவை அடைக்கும் பேரறிவை பெற்று சிந்தையற்ற தனித்தலைமை பதியில் குடியேறி வாழ்பவர்களே இராஜ சன்னியாசி என்ற அருள் வர்ஷிப்புடன், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 14-02-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **எழில் பல கலைக ளிலகுசெம் மலரே...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

**குருபிரான் அருளமுதம்:**
ஆதி பரமகுரு தட்சிணாமூர்த்தி அருளிய மெய்ஞ்ஞானமே இன்றளவும் வில்லோசையாகத் தொனிக்கிறது. ரோஸ்மீதாக்குடைய காலமென்பது நம் தந்தையின் நினைவாகிய ஜீவ தேகத்தில் குடியிருந்த நாளாகும். அத் திருஸ்தலத்தில் நாம் வாங்கி வந்த அமானிதக் கடனைத் தீர்க்க அவதரித்து வருபவரே பரிசு குரு.



Copyright © AMNA Trust, Chennai	



**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 230**

பெரியோர்களின் சீதக்களபச் செந்தாமரைப் பூம்பாதத்தைத் துணையாகக் கொண்டால், வினைத் தொடரிலிருந்து விடுதலை பெறலாம். வேத வேதாந்தங்களின் உட்பொருள் ஆதார உயிர்ப்பதிப்பை அறிந்து அவரவர் நாமத்திற்குரிய பொருளை தரிசிப்பதே தன்னை அறிதலாகும்.

*ஜீவ சகோதரர் விஜயகுமார்:* இறைவனின் கஜானாவிலுள்ள அயிஸ்வரிய நிதிச் செல்வமே பெரியோர்களின் அருளமுத வர்ஷிப்பாகும். மனிதன் தோற்றத்தளவில் ஒன்றுபட்டாலும் குணத்தால் வேறுபடுகிறான். ஆசானின் அன்பெனும் விசேஷத்தால் முக்குணம் கடந்து நிர்க்குணமாக வாழ்வதே வரமான சொர்க்கபதி வாழ்வாகும்.

*ஜீவ சகோதரர் சங்கர் :* சஞ்ஜீவி சடாமகுடராகிய குரு பிரானின் அருளால் ஏழ்நிலைக் கம்பமாக விளங்கும் திருப்பாதமானது மனுவின் தலையில் சூட்டப் பெறுகிறது. துளப வேந்தரின் தயவால் ஜலத்தினில் அக்கினி உருவாய் பிரகாசிக்கும் சிவத்துடன் இரண்டறக் கலந்து வாழ்பவர்கள் சிரஞ்ஜீவிப் பட்டம் பெற்று செல்வ சம்பத்துடன் சிறந்து விளங்குகிறார்கள். பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 15-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ பிரம்மதேசம்
## திருக்கார்த்திகை குடில் சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

வள்ளல் பெருமான் அருளிய **அருட்ஜோதி ஆனேன் என்று அறையப்பா முரசு ...** எனும் திருஅருட்பா பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

ஞானக் கடலாக வரும் குருபிரானின் திரு ஆலவாயிடத்து பிறங்கும் நாதமே வேத மா மறையாகும். உலகை உய்விப்பான் வேண்டி, மனுவின் மூன்றாவது கண்ணாகிய அறிவுக் கண்ணை திறப்பித்து அவரவர் நாமத்திற்குரிய பொருளை நிஜ ரூப தரிசனையாக்கி வைப்பவரே தவ சிரேஷ்டராகிய மெய்குருபிரான்.

கார்க்கும் தீ கைக் கொண்ட கார்த்திகேயரின் தெள்ளமுதமாகிய நாதத்தின் மூலம் அஞ்ஞானமாகிய இருள் நீங்கி அறிவுப் பிரகாசத்தில் குடியேறும் திருநாளே சிவராத்திரி. பாதம் அறிந்தவர்க்கே வேதம் விளங்கும் என்ற சாலை ஆண்டவர்களின் திருவாக்கின் படி, பாத நிலை வைத்த வரோதயராக, நவக்கிரக கோள் மாற்றும் நாத ஜோதிடராக புண்ணிய உரு தாங்கி இப்பூவுலகில் அவதரித்து, தன் எனும் ஜீவகுகைக்குள் பொதிந்திருக்கும் மறுவிலாக் குகனை தரிசிக்க செய்கிறார்கள். காலச்சக்கரத்தின் பிறப்பு இறப்பு எனும் பிறவிச் சுழலில் உழன்று, வினைத் தாக்கத்தால் நவக்கிரகங்களின் பிடியில் சிக்கி தவிக்கும் நம்மை மீட்டு மரணமிலாப் பெருவாழ்வு அளிக்கிறார்கள்.

புண்ணியங்களுக்கு எல்லாம் மேலான புண்ணியமும், தர்மங்களுக்கு எல்லாம் மேலான தர்மமான பரோபகார செயல் நித்தமும் நிகழும் இடமே ஆதி மார்க்க னீதி அவை என்று ஆசீர்பதித்து, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.



Copyright © AMNA Trust, Chennai 

## 18-02-2026 ~ புதன்கிழமை ~ சிவகாசி சிறப்பு அவை
## தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

அருணகிரி நாதர் அருளிய, **கைத்தல நிறைகனி அப்பமொடு அவல்பொரி ...** எனும் திருப்புகழ் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
பெரியோர்களின் திரு நாவிலிருந்து பிறங்கும் அருள் மொழியானது நம் மீது படிந்து அறியாமை எனும் இருளைப் பொடிக்கிறது. நம் கடத்துக்குள் ஆவிப் பொருளாக நின்றிலங்கும் இறை பொருளை பிரம்ம வித்தையின் மூலம் தரிசிக்க வைப்பவரே உத்தம சுத்த உறுதி நாயகரான குரு பெருமான்.

மாணிக்க வாசகர் அருளிய **பால் நினைந்தூட்டுந் தாயினும் சாலப்பரிந்து, நீ பாவியேனுடைய ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்கி** எனும் திருவாசக பாடலுக்கிணங்க, மனுக்குலம் செழித்தோங்கி வளர்வதற்கான வான் மழை பொழியவே தெய்வீகப் பயணம் நித்தம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. குருபிரான் தங்கள் திருக்கரத்தில் சிவச்செங்கோல் தாங்கி, தன் அருட் கடாட்ச திருப்பார்வையால் ஆசீர்பதித்து நீதிச் சொல் கொண்டு நம்மை நெறிப்படுத்துகிறார்கள். மனுத்தலைக்குள் சிவன் எனும் வாடாத தீபமாக ஒளி வீசிக் கொண்டிருக்கும் அறிவுச் சுடரை தூண்டும் குருநாதரின் அனுபோகம் பெற்றவர்களே புண்ணியர்கள்.

அருட்பிரகாச வள்ளலார் அருளிய **வையகத்தீர் வானகத்தீர் மற்றகத்தீர், உமது வாழ்க்கையெலாம் வாழ்க்கையென மதித்து மயங்காதீர், மையகத்தே உறு மரண வாதனையைத் தவிர்த்த வாழ்கையதே வாழ்க்கை** - எனும் திருஅருட்பா பாடலின் படி, அழி உலக வாழ்வை பெரிதென எண்ணி மயங்கி விடாமல், அழியா திருநாட்டிற்கு போக்குவரத்தாக வாழும் சிவகுரு வரதரின் திருவடியில் சரணடைந்து, முப்பொருளாகிய உடல், பொருள், ஆவியைத் தத்தம் செய்து மரணமிலாப் பெருவாழ்வு பெற்று சிறப்புடன் வாழ வேண்டும் என்ற அருள் வர்ஷிப்புடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 21-02-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
## தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்ந மனத் தனியோகர் உளத்திற் பூக்கும் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**
சிவஞான யோகியாக வரும் குருநாதரின் திருநாவிலிருந்து தேனாறாக பாயும் நாதமே தூய்மதி. நிலையா மனதை நிலைப்படுத்தி அறிவிருக்கும் தலத்தில் குடியேற்றி வைக்கும் ஆசானின் நாத வல்லபத்தை மெய் அனுபவத்தால் உணரலாம்.

**எமபடரடிபடு கோடாயிதக்கூர் - திருவாக்கியம் எண் : 230 (தொடர்ச்சி)**
**குருபிரான் அருளமுதம் :**
சர்வ சன்னத முத்திரைகளும் திருக்கரத்தில் தரித்து வரும் பாரவான்களின் கருணையால் மெய்ஞ்ஞான ராஜபாட்டையானது உண்டாக்கப் பெறுகிறது. உலகை உய்வித்து அறிவின் லட்சணத்தை மனுக்குலத்திற்கு உணர்த்தவே வான நாட்டிலிருந்து வேத வேதாந்தங்களும் இப்பூவுலகிற்கு இறக்கப் பெறுகிறது.


Copyright © AMNA Trust, Chennai 

**காமீல்கள் னோக்கம் - குருபிரான் அருளமுதம் :**

காமீல் எனும் இறைப்பதம் பெற்ற சிவச் செம்மல்கள் திருமேனி தாங்கி வந்து கடல் முரசறைந்து மெய்ச்செயலை போதிக்கிறார்கள். அநீதமாகிய மாம்ச இச்சை மரணம் என்பதை உணர்த்தி, ஒளி தேகத்தில் நுழைவதற்கான நீதத்தை அருளி மனமெனும் கடுவாயாகிய எமனிடம் சிக்காமல் காக்கிறார்கள். மனுவின் சிரத்தில் இயற்கை உண்மை கடவுளாக இலங்கிக் கொண்டிருக்கும் ஆன்ம பிரகாசத்தை தரிசித்தவர்களே சிரஞ்ஞீவியாக திகழ்கிறார்கள்.

விசுவாவசு ஞு மாசி மாதம் 17ம் நாள் 01-03-2026 ஞாயிற்றுக்கிழமை பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பரிபூரண ஆசீர்பாதத்துடன் சரவண நந்தவனத்தில் ஆதி மார்க்க னீதி அவையின் மெய் ஆலய திறப்பு விழாவும், 64 அடி உயர கொடி மரத்தின் உச்சியில் மின்னொளி வீச கொடியேற்றும் வைபவ சிறப்பும் நடைபெற இருக்கிறது. இப் பரிசுத்த எல்லையில் பாதம் பதிக்கும் மக்கள் யாவரும் வரமாதி வரம் பெற்று நீடூழி வாழ்வார்கள் என ஆசீர்பதித்து, பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## 26-02-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
## தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகி வளர் ...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

**குருபிரான் அருளமுதம்:**

நித்யானந்தமான இறைவனால் நித்தியத்திற்காக படைக்கப் பெற்ற உயிர்கள் அனைத்தும் இன்பமும் துன்பமும் கலந்த அனித்திய வாழ்வே வாழ்கின்றன. **தீதும் நன்றும் பிறர் தர வாரா** எனும் பெரியோர் திருமொழிக்கு ஏற்ப நித்திய ஆனந்தத்தை அறிய விடாமல் தடுப்பது அவரவர் மனமே. நீதி மொழியாகிய ஆசானின் நன் நாதமே, சுருதி யுக்தி முயற்சி கொண்டு அடைய முடியாத அழியாத் திருனாட்டில் குடியேற்றும் வல்லமை கொண்டது.

**திருமெய்ஞ்ஞானக் கொரல் : திருவாக்கியம் : 10 ( தொடர்ச்சி)**

மதம் மாறுவதால் மனித அறிவில் எவ்வித மாற்றமும் ஏற்படாது. அவரவர் மதத்துக்குரிய வேதம் உணர்த்தும் அகமியச் செயலான சமரசம், சமத்துவம், சமாதானத்தை அறியும் போது தான் அவன் தன் மதத்துக்குரியவன் ஆகிறான். மனதை அறிவாக மாற்றும் உளவால் தன் நாமத்துக்குரிய இறைபொருளை அறிவதே ஆறாவது அறிவைப் பெற்றதன் பெரும் பயனாகும். ஆசானின் நாதமாகிய ஜீவ ஊற்றத்தால், நம் உள்ளத்துள் உறைந்துள்ள பொய்களனைத்தும் களையப் பெற்று ஜீவ மெய் விருட்சமானது வானோங்கி வளர்கிறது.

**வள்ளல் பெருமான் அருளிய நான்கு புருஷார்த்தங்கள் :**

1. ஏமசித்தி - உலகியல் கடமைகளை நிறைவேற்றுதல்.
2. சாகாக் கல்வி - சாவரும் முன் சாகப் பழகும் சன்மார்க்கச் செயல் பழகுதல்.
3. தத்துவ நிக்கிரகம் செய்தல் - மனித உடல் ஒரு தத்துவ வடிவம் என்பதை அறிந்து தேகப்பற்று விட்டு ஆவிக்குரிய சிந்தனையே நித்திய சந்தோஷம் என்பதை உணர்தல்.
4. கடவுள் நிலையறிந்து அம்மயமாதல் - நானும் இறைவனும் ஒன்று எனும் அத்வைத நிலை அடைதல்.



Copyright © AMNA Trust, Chennai

குருபிரான் அருளால் காலச் சக்கரத்தின் ரகசியம் அறிந்து காலாதீத எல்லையில் குடியேறி வாழ்பவனே சன்மார்க்கி என்ற பகிர்தலுடனும், பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

## இசை வகுப்பு
## தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

### 01-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய அமுத கலைக் ஞான போதம் முதற் காண்டத்தில் **மறையெனும் மெய் ஹலால்...** என்ற திருப்பாடலுடன் அவை உதயமானது. பூரணப் புதையலில் **ஆமீனாய் னின்றிலகு மூமீ னாடு...** என்ற பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 08-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆத்தாளாய் வந்நெனக்கு...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. தெய்வத் தேடு கூடகத்தில் **சீராங் ஙுரான் வேதத்தே...** என்ற பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

### 22-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய குருமணி மாலையில் **அங்ஙம திடத்தி லைம் புலக் கதவை...** என்ற ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது. குருபிரான் வழி காட்டுதலின் படி, சென்ற வாரத் தொடர்ச்சியான **சீராங்ஙு ரான் வேதத்தே...** பாடல் ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவை இனிதே நிறைவானது.

# குரு வா ஆழ்க! குருவே துணை!



Copyright © AMNA Trust, Chennai 

## 2026 - பிப்ரவரி மாதம் நடைபெற்ற அவை நிகழ்வுகள்

### 15-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை

குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் காஞ்ஞிபுரம், பிரம்மதேசம், கார்த்திகை குடிலுக்கு எழுந்தருளி ஞான தேட்டமுள்ள மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.





### 18-02-2026 ~ புதன்கிழமை

குருபிரான் சாலை ரவி அப்பா அவர்கள் சிவகாசிக்கு விஜயம் செய்து ஞான தேட்டமுள்ள மக்களை சந்தித்து அருளமுத வர்ஷிப்பு வழங்கினார்கள்.








Copyright © AMNA Trust, Chennai 



**22-02-2026 ~ ஞாயிற்றுக்கிழமை**

மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயாவின் ஆண்டு பூர்த்தி திருவிழா குருபிரான் சாலை ரவி அப்பா திரு முன்பாக சிறப்பாக நடை பெற்றது.





Copyright © AMNA Trust, Chennai

## ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

| நாள்/ இடம் | னிகழ்வுகள் |
|---|---|
| **14-04-2026 / சென்னை செவ்வாய்க்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்பாக தமிழ்ப் புத்தாண்டு சிறப்பு அவை சென்னையில் நடை பெற இருக்கிறது. |
| **30-04-2026 / திண்டிவனம் வியாழக்கிழமை** | குருபிரான் சாலை ரவி அப்பா அவர்களின் திரு முன்னிலையில் திண்டிவனம் சரவண நந்தவனம் மெய் ஆலயத்தில் இரவு சிறப்பு அவை நடைபெற இருக்கிறது. |



Copyright © AMNA Trust, Chennai

**குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 பிப்ரவரி மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 47**

**அனைவருக்கும் நன்றி !!!**

**AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்க ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.**

**Account Name: Aathi Margha Neethi Avai**
**Account Number: 50200047470073**
**IFSC: HDFC0000323**
**Branch: Mylapore**



Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

***Published by:***
***AMNA TRUST (Registration No. 163/2019)***
***13/2, Hyder Garden 2nd Street, Otteri ,***
***Chennai – 600012***

[***www.amnatrust.org***](http://www.amnatrust.org)

**Contact Us**:

*Email: write2amnatrust@gmail.com*

*YouTube Channel: https://youtube.com/c/amnatrust/*

*Facebook Page: https://www.facebook.com/amnatrust/*

***பின்குறிப்பு****: இம்மின்னணுச்சஞ்சிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

***The Editorial Team:***

*Shri. Sankar, Sivakasi*
*Shri. Vijayakumar, Sivakasi*
*Shri. Venkatesa Muthu, Chennai*
*Shri. Vadivelan, Chennai*
*Shri. Manimaran, Chennai*
*Shri. Thiyagarajan, Chennai*
*Shri. Chiranjeevi, Chennai*

*Issue 56 – Month: March 2026*